நி.கு.எண் - 1/2024-25 நாள் - 08/04/2024. ப.மலம்.001390.
AXIS Bank/Saligramam.

பலவகை வரவு ரசீது

ஊராட்சி படிவம் எண்.6

புத்தக எண்.

அசல்

பற்றுச் சீட்டு A : 21689

நாள் : 08/04/2024

.....படப்பை..... ஊராட்சி

திரு...LUX LAND..... கிராமம் ..காலி கிராமம், சென்னை-93 என்பவரிடமிருந்து

ரூபாய் ...1,87,475/-.. ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்தி எழுநூற்று ஏழாயிரத்து நானூறு எழுபத்தைந்து மட்டும்

.....தொழில்வரி பணம்..... வகைக்காக பெற்றுக்கொள்ளப்பட்டது.

சர்வே எண். 393/1A2

S. K.

ஊராட்சி தலைவர்.

தலைவர்
படப்பை ஊராட்சி
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்

பணம் செலுத்துபவரின் கையொப்பம்

வரி வசூலிப்பவர்
8.4.2024

குறிப்பு :

1. இந்த பற்றுச்சீட்டு ஊராட்சி தலைவரின் **Facsimile**-வும் மற்றும் வரி வசூலிப்பவரின் கையொப்பமும் இருந்தால்தான் செல்லுபடியாகும்.
2. பணம் செலுத்துபவரின் கையொப்பம் தவறாது பெறப்படவேண்டும். இடது கைபெருவிரல் ரேகை பெறும் இனத்தில் அசல் மற்றும் நகல் இரண்டு பிரிதிகளிலும் பெறப்பட வேண்டும்.

விடுநர்
திரு.சி.கர்ணன்,
தலைவர்/நிர்வாக அலுவலர்,
படப்பை ஊராட்சி,
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்
M/s. LUX LAND
NO:3,80Feet Road,
Sathya Garden, Saligramam,
Chennai -93.

ந.க.எண். 1 / 2024-25/ப.ஊ **நாள்.** 06.04.2024

அய்யா,

காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை ஊராட்சி குன்றத்தூர் ஒன்றியம்

பொருள் - மனைப்பிரிவு - குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் - படப்பை ஊராட்சி - படப்பை கிராமம் சர்வே எண்.**393/1A2** -ல் 1 **ஏக்கர்** அல்லது 4050 **ச.மீ** அல்லது 43,594 **ச.அடி** பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்க உரிய கட்டணங்கள் செலுத்த கோருதல் - தொடர்பாக.

பார்வை - 1. Town and Country Planning Deportment (Planning permission) ROC No. 04BAY119/2024/TCP Date – 05/04/2024
2.அரசாணை நிலை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.04.05.2017.

****

பார்வை 1 ல் காணும், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் காஞ்சிபுரம் மண்டலம் அவர்களின் கடிதத்தின்படி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், படப்பை ஊராட்சி/ படப்பை கிராமத்தில் அடங்கிய பின்வரும் சர்வே எண்ணில் கீழ்கண்டவாறு கட்டணங்கள் செலுத்தக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வ எண்	சர்வே எண்	மனை மொத்த அளவு ச அடி	தானம் வழங்கப் பட்ட பொது உபயோகம் போக மீதமுள்ள மனையின் அளவு	சந்தை மதிப்பு	3 % Market Value ரூ.
1	2	3		4	**5**
1	393/1A2	1 Acre (or) 4050 Sq.M (or) 43,594 Sq.ft	0.73Acre (or) 2981.73 Sq.M (or) 32,095 Sq.ft	65,70,000/- (Rs.90,00,000 per Acre)	**1,97,100/-**
மொத்தம்					**1,97,100/-**

2	மனை பிரிவு கட்டணம் ச.அடிக்கு ரூ.5/- வீதம்	32,095	**32,095 *5**	**1,60,475/-**
3	கூராய்வு கட்டணம் மனை 1க்கு ரூ.1000/- வீதம்	26	**26*1000**	**26,000/-**
4	கூராய்வு கட்டணம் கடை ஒன்றுக்கு (ஒரு சதுர அடி ரூ.5/- வீதம்)	——	——	——
5	கூடுதல் கட்டணம் ஏக்கருக்கு ரூ.1000/-	1ஏக்கர்	**1*1000**	**1000/-**

	மொத்தம் (வரிசை எண்.2,3,4 மற்றும் 5)	**1,87,475/-**
6	கொடி நாள் (Flag Day)	**1000/-**

மேற்குறிப்பிட்டுள்ள வரிசை எண்.1-ன்படி 3% Market Valueகட்டணம் ரூ. **1,97,100/-**கருவூலம் மூலம் கீழ்கானும் அரசு கணக்கிலும், வரிசை எண்.2,3,4மற்றும் 5-ன் கூடுதல் கட்டணம் ரூ. **1,87,475/-**மட்டும் Padappai VP-224097, Kanchipuram Dt. என்ற பெயரில் வங்கி வரைவோலையாக சம்மந்தப்பட்ட ஊராட்சியில் செலுத்தவும், மற்றும் ரூ. **1,000/-**Armed Forces Flag Day Fund என்ற பெயரில் வங்கி வரைவோலையாக செலுத்தி விவரத்தினை இவ்வலுவலகத்தில் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6/4/24.


தலைவர்/நிர்வாக அலுவலர்,
படப்பை ஊராட்சி,
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்
(இ) படப்பை

06.4.2024

அரசு தலைப்பு
02602-Directorate of Town and Country Planning
Receipt Type – Others
Sub Type – Collections
Acct Code – 021760800AS22709

படப்பை ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்:-திரு.சி. கர்ணன்

ந.க.எண். 01 / 2024-25/ப.ஊ **நாள். 08.04.2024**



பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு - குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் - படப்பை கிராமம் சர்வே எண்.**393/1A2** -ல் 1 **ஏக்கர்** அல்லது 4050 **ச.மீ** அல்லது 43,594 **ச.அடி** பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு மனைக்கான வரைபடம் ஒப்புதல் அளித்து உத்தரவு வழங்குதல் - தொடர்பாக

பார்வை : 1.அரசாணை எண்.71ஊ.வ துறை நாள்.16.06.2003
2. Town and Country Planning Deportment (Planning permission)
ROC No. 04BAY119/2024/TCP Date – 05/04/2024

****

உத்தரவு :-

பார்வை 1 ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 2 ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி,காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய படப்பை ஊராட்சி - படப்பை கிராமம் சர்வே எண்.**393/1A2** -ல் 1 **ஏக்கர்** அல்லது 4050 **ச.மீ** அல்லது 43,594 **ச.அடி** பரப்பளவு கொண்ட இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு மனைக்கு உரிய கட்டணங்கள் அரசு தலைப்பில் செலுத்தப்பட்ட கட்டணம் ரூ. **1,97,100/-** ரசீது எண். 20240408006644 நாள். 08-04-2024, படப்பை ஊராட்சிக்கு செலுத்தப்பட்ட கூராய்வு மற்றும் கூடுதல் கட்டணம் ரூ. **1,87,475/-** ஊராட்சி ரசீது எண். 21689 நாள். 08.04.2024 பெறப்பட்டுள்ளது. எனவே - படப்பை கிராமம் சர்வே எண்.**393/1A2** -ல் 1 **ஏக்கர்** அல்லது 4050 **ச.மீ** அல்லது 43,594 **ச.அடி** பரப்பளவு கொண்ட இடத்தில் அமையும் குடியிருப்பு மனைக்கான வரைபடத்திற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபட ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1.) மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு **ம.வ/ந.ஊ.து.இ (காமா) எண்.**48/2024

அ என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லைக் கற்கள் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் ஊராட்சி கட்டிட விதிகள் 3(5) ன்படி ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கேற்ப சரளைக் கற்களைக் கொண்டு மனுதாரரால் நிர்வாக அதிகாரியால் (Excuetive Authority)நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்பட வேண்டும்.

ஆ அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால் துப்பரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகள் நிர்வாக அதிகாரியின் கருத்திற்கேற்ப மனுதாரர் அமைத்து தர வேண்டும்.

இ நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதல் இன்றி செய்தல் கூடாது.

ஈ அங்கீகரிக்கப்பட்ட இம் மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகளை மனைப்பிரிவு விண்ணப்பதாரர் / உரிமையாளர் முறையாக அமைத்து அல்லது அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி சம்மந்தப்பட்ட ஊராட்சி மன்றத்திற்கு உரிய படிவத்தில் பதிவு செய்து பொதுச் சாலையாக பராமரிக்க தலைவருக்கு தானமாக ஒப்படைக்க வேண்டும்.

உ மேற்படி சாலைகளை பொதுச்சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவு கட்டணத் தொகையை பெறும் வகையில் பத்திரத்தில் மனுதாரரின் கையொப்பம் பெறப்பட வேண்டும்.

2) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்

3) மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ; வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

4) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை, பண்டகச்சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.

5) விரிவு அபிவிருத்தித் திட்டப் பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி தனித்தொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே காட்டப்பட வேண்டும். ஒரு பக்கம் இணைந்த வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒரு பக்கம் இணைந்த வீடுகளே கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக் கூடாது.

6) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் 7 மீ (23 அடி) சாலைக்கு ,1.5 மீட்டரும் (5 அடி) 9 மீ (30 அடி) அகல வரையிலான சாலைக்கு 1.5 மீட்டரும் (5 அடி) 12 மீட்டருக்கு (40 அடிக்கு) மேல் மற்றும் 15 மீ (50 அடி) அகலத்திற்குட்பட்ட சாலைகளுக்கு 3 மீ (10 அடியும்) 15 மீ (50 அடி) அகலத்திற்கு மேலும் 21 மீ(70 அடி) அகலத்திற்குட்பட்ட சாலைகளுக்கு 4.5 மீ (15'0") அடியும், 21 மீ (70 அடி) மேல் 24 மீட்டரும் (80 அடி) அகலம் அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6.0 மீ (20 அடி) என்ற அளவில் கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். ஊராட்சி கட்டிட விதிகளின்படி மனையின் எல்லைக்கும் கட்டிட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் தெருவின் உயர் மட்டத்திலிருந்து 1.8 மீ (6அடி) மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகளின்படி 2.4 மீ (8.0) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டிடமோ சுவரோ கட்டுதல் கூடாது.

7) மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5 மீ அளவுள்ள திறந்தவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 மீ திறவெளி விடப்பட வேண்டும். 10 மீ வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத்திறவெளி விடப்பட வேண்டும். 10 மீ வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத்திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 மீ விடப்பட வேண்டும்.

8) ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 3 மீ அளவுள்ள திறந்தவெளி இருத்தல் வேண்டும். இந்தப்பின்பக்கத் திறவெளியில் கிணறு, கழிப்பறை எருக்குழி மாட்டுத்தொழுவம், உந்துவண்டி நிறுத்தம் கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லது ஆனால் அதைச் சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம் ஆனால் கட்டிடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நீளத்தில் முன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து 3 மீ/ 3.75 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

9) விரிவு அபிவிருத்திக்கு திட்டப் பகுதியில்அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி மனையின் பரப்பில் 50 அல்லது 67 விழுக்காட்டிற்கு மேல் கட்டிடம் கட்டப்படக் கூடாது. கட்டிடம் விடப்படும் திறந்த வெளியினை தோட்டமாகவோ, திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ துப்புரவாக பராமரித்தல் வேண்டும்.

10) மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்படவேண்டும்.

11) கடைக்கால் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ நிலச்சரிவை சரி செய்யவோ மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்துதலோ கூடாது.

12) 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தார்போல் அடுத்தடுத்து 9 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

13) மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்பாக **படப்பை ஊராட்சி** ஊராட்சி மன்றத் தலைவர் அவர்கள் ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் ஊராட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

14) மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

15) கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம்/ இடங்கள் வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். இவைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

16) பூங்கா, சிறுவர் விளையாடுமிடம் திறவிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்க வேண்டும்.

17) மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப்பாதை/ தந்திக்கம்பிப்பாதை அமைந்தால் கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றியமைக்க வேண்டும்.

18) மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலம் ஊராட்சி மன்றத் தலைவர் உடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

19 மேற்படி மனைப்பிவிற்கு உள்ளாட்சி துறையால் ஒப்புதல் மட்டுமே வழங்கப்பட்டு உள்ளது

அ) என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் நீதிமன்றத்தின் முன் முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ) தமிழ்நாடு நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால் மனைப்பிரிவுற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விவரத்தினை தொடர்புடைய உச்ச வரம்பு சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

இ) மனைப்பிரிவு இடம் 1984 ம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4(1) ன்படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி பரிசீலனை செய்த பின்னரும் நில உச்ச வரம்புச் சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்திருத்தச்சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகளை நிறைவு செய்வதற்காக தலைவர் மனநிறைவு அடைந்த பின்னரேதான் மனைப்பிரிவிற்கு ஊராட்சியில் ஒப்பதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

20) மனுதாரர், **படப்பை ஊராட்சி** ஊராட்சி மன்றத் தலைவர், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களிடம் வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண்ணும், நாளும் மன்றத்திற்கும், மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

21) தமிழ்நாடு வீட்டு வசதி மனைப்பிரிவு மனையின் பரப்பு 110 சதுர மீட்டருக்கு குறைவாக இருந்தால் கட்டிட விதிகள் மட்டுமே பொருந்தும்.

22) நிலவங்கி என்று ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை அரசாணை எண்.139, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்.14.09.93 ன்படி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்று செய்யப்பட வேண்டும்.

23) மனுதாரர் சமர்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில், நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது.

24) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

25) இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொது மக்கள் பார்வைக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் 6 அடி X 4 அடி என்ற அளவுக்கு குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.

26) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் மனைப்பிரிவு வரைபடம் நகல் வழங்கப்பட வேண்டும்.

27) EWS மனைகள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகளாகும். இம்மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது.

28) பின்வரும் காலங்களில் தணிக்கையில் அரசுக்கோ, ஊராட்சிக்கோ சேரவேண்டிய கட்டணங்கள் ஏதாவது வசூலிக்கப்படவேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டால் அக்கட்டணங்கள் செலுத்தப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

		பரப்பளவு	விழுக்காடு
மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	-	1ஏக்கர் அல்லது 4050 ச.மீ அல்லது 43,594 ச.அடி	-
ஒதுக்கிய மனைகள்	-	26	
உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது			
பொது உபயோகம்		20.73 ச.மீ	0.68%
உத்தேச மனைபிரிவு சாலை		1029 ச.மீ	---
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது			
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு ஒப்படைக்கப்பட்டது	-	18.54 ச.மீட்டர்	0.61%
மனுதாரர் விற்பனைக்குரியது			
கடை	-	---	---
OSR ஒதுக்கீடு பூங்கா	- -	10 % பூங்கா ஒதுக்கீடிற்கு பதிலாக கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.	---

8/4/24.

ஊராட்சி மன்றத் தலைவர்,
படப்பை ஊராட்சி,
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்
(இ) படப்பை

8.4.2024

பெறுநர்

M/s. LUX LAND
NO:3,80Feet Road,
Sathya Garden, Saligramam,
Chennai -93.

நகல் :-

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்
காஞ்சிபுரம் மண்டலம் இரங்கசாமி குளம் ,
காஞ்சிபுரம் -631501.

Town and Country Planning Department(Planning Permission)

No.33/I 95, kotrampalayam Street,
Old Employment Office

ROC No. 04BAYII9/2024/TCP

Date : 05/04/2024

From:

Joint Director / Deputy Director / Assistant Director

No.33/I 95, kotrampalayam Street,
Old Employment Office

To :

The Panchayat President,
Padappai Panchayat,
Kundrathur Panchayat union / Taluk,
Kancheepuram District.

Sir/ Madam,

Sub : Residential Layout - District Town and Country Planning Office Kancheepuram District - Formation of a residential layout to an extent of 4050.00 sq.m in the Land Bearing of S.F.Nos. 393/1A2- Padappai Village, Kundrathur Panchayat union / Taluk, Kancheepuram District - Technical Approval issued - Forwarded for further action - Regarding.

Ref :
1. Online Application No. 04BAYII9, M/s. LUXLAND its partners Mr.Ravi kumar and Mr.S.Soundaraj, through online Dated: 20.02.2024.
2. District Town and Country Planning Office, Kancheepuram District Road Pattern issued through online dated. 21.03.2024.
3. Agri NOC, Kancheepuram, NOC Letter Mu.Mu. No.1653/2024/D2, Dated: 06.03.2024.
4. Circular Roc. No.19799/2020, Dated: 24.12.2020 of Director of Town and Country Planning, Chennai.
5. M/s. LUXLAND its partners Mr.Ravi kumar and Mr.S.Soundaraj, document received through online Dated:28.03.2024. (Gift deed document No.2741/2024, dt:27.03.2024).
6. G.O.(Ms) No.138, Housing and Urban Development Department, Dated: 04.06.2004.
7. G.O.(Ms) No.79, Housing and Urban Development Department, Dated: 04.05.2017.
8. G.O. (Ms)No.18, Department of Municipal Administration and Water supply, dated:04.02.2019, G.O. (Ms) No.16 Department of Municipal Administration and Water Supply, dated: 31.01.2020.
9. G.O.(Ms)No.181, Housing and Urban Development Department, Dated: 09.12.2020.
10. G.O.(Ms)No.141, Housing and Urban Development Department, Dated: 23.09.2020.
11. Government Letter No.19113 / Nov 4 (3) / 2017-1, Housing and Urban Development Department, Dated: 30.08.2017.
12. Circular Roc No.13686/2017/LA1, Dated: 08.09.2017 of Commissioner of Town and Country Planning, Chennai.
13. Circular Roc No.320/ 2022/TCP3, Dated: 07.01.2022 of Director of Town and Country Planning, Chennai.
14. Demand requested through online, Dated: 20.02.2024 and 02.04.2024
15. Payment received through online, Dated: 20.02.2024 and 02.04.2024
16. Circular Roc No. 4367/2019/TCP2, Dated: 14.08.2021 of Director of Town and Country Planning, Chennai.
17. Commissioner ,Kundrathur Panchyat union Letter Na.Ka.No.1484/2024/A3,Dated:15.03.2024. (Approach road road certificate)

ORDER:-

The application was processed as per the prevailing rules and after perusing the records and after conducting site inspection, the applicant was directed to handover the portion of land earmarked for roads and public purposes meant for local body and TANGEDCO vide reference 2nd cited above. On receipt of gift deed vide reference 5th cited above, and on receipt of payment of charges such as Centage charge, Scrutiny fee, Display board Deposit, and Armed Forces Flag Day Fund vide reference

15th cited above, the Technical Approval is issued to the mentioned layout subject to the following conditions:

1. The Technical Approval is issued to the above mentioned layout,and the number is assigned as SWP/D.DTCP/Kancheepuram District - LAYOUT No.48/2024.

2. The local authority shall accord permission duly following the rules /regulations/Orders issued from time to time under the respective Acts.

3. The local authority shall accord permission/approval after collecting requisite fees/charges as applicable and the copy of the approval issued shall be forwarded to this office for record.

4. Also, the local authority shall forward the copy of such permission/approval to the office of the Sub registrar of Registration department and the office of the Assistant Director of Survey and land records concerned for information and for making mutation in their records.

5. Also, the local authority shall forward the copy of such permission/approval to the Tahsildhar concerned with a direction to the applicant to pay the requisite charges for making mutation in the TamilNilam/Collabland website.

SPECIAL CONDITIONS:

1. This office has not legally certified the title to the ownership by granting the technical clearance and planning permission. Only the entitlement to develop the land by the applicant is verified through the documents uploaded in the web portal. Any person wishing to purchase the property must individually ascertain the ownership of the property of the developer/seller. If any dispute arises towards the ownership, the same shall be settled through the appropriate forum. This office is not the appropriate authority to decide on this.

2.The owners / developers shall be allowed either to carry out Infrastructure development works as per the standards specified by the local body concerned or to pay the estimate cost to the local body. Concerned local body shall prescribe the standards for the provisions of basic infrastructure like roads, drains, water supply etc. for the layout, as per existing rules. Before taking over the infrastructure developed by the owners / developers, the local bodies shall ensure the quality of the works done by the owners/ developers.

3. The local authority shall also ensure that the sub division for the land earmarked for road and land meant for public purposes such as Local body and TANGEDCO are properly carried out and transferred in favour of the local body/TANGEDCO concerned before issuing the final approval.

4. As envisaged under the "Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016, the promoter has to advertise, market, book, sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Authority. The applicant has to comply the said provisions.

5.If the layout is located in an area other than planning area, the local authority shall also collect the Scrutiny fee Rs-1000 /- per plot and 3% of market value of land as land use conversion charges before issuing the final approval as envisaged in Government Order under the reference 7th cited above. The payment of charges shall be made under the following head of account.

Head of Account :
"0217 Urban Development - 60 other Urban
Development Schemes - 800 other Receipts - AS
Receipts under Land Use Conversion Charges-27"
Non Taxation fees - 09 Collections
(DPC : 0217-60-800-AS 22709)"

6. The fees/charges collected from the applicant are as follows:
Scrutiny Fees :Rs. 6075/- ,Date – 20.02.2024
Centage Charge:Rs.9,000/- ,Date – 02.04.2024
Display board Charge : Rs.10,000/- ,Date – 02.04.2024
Armed Forces Flag Day Fund : Rs.2,000/-:Date – 04.04.2024.
OSR Fees :Rs. 3,11,357/- ,Date – 28.03.2024

To:
The Panchayat President,
Padappai Panchayat,
Kundrathur Panchayat union / Taluk,
Kancheepuram District.

Copy to:-

1. M/s. LUXLAND
   Its partners Mr.Ravi kumar and Mr.S.Soundaraj,
   No 35-42 . Second floor . No S3 . 6th Street
   Periyakudal,Aminjikarai,Chennai,600102,
   Ph.No: 9176900060
   E-mail: harismaaconsultant0@gmail.com.

2. Tamil Nadu Real Estate Regularity Authority,
   No.1A, CMDA Tower II, 1st Floor,
   Gandhi Irwin Bridge Road, Egmore,
   Chennai - 600 008.

3. Sub Registrar,
   Padappai Sub Registrar Office,
   Kancheepuram District.

GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS

S.No	Description of Charges	Amount	Receipt No and Date
1	Scrutiny fee	6075	20/02/2024
2	OSR Fee	311357	28/03/2024
3	Centage Charges	9000.00	02/04/2024
4	Development Charges		
5	Display Board Charges	10000.00	02/04/2024
6	Satellite town charge		

Joint Director/Deputy Director/Assistant Director(i/c)
District Town and Country Planning,


Kancheepuram District.

Enclosure

1.Layout original map and Condition – 2 set

Signature valid

Signed by: Deputy Director
Location:Kancheepuram
Date:2024.04.05 15:08:22



ஆணையாளர், குன்றத்தூர் ஊராட்சி
ஒன்றியம் கடிதம் ந.க எண்-14842024/அ3
நாள்:15.03.2024 - ல் சாலைக்கான
சானறு வழங்கப்பட்டுள்ளது.

Signature valid

Signed by: Deputy Di...
Location: Kanchipu...
Date: 2024.04.05 ...:52

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்
படப்பை ஊராட்சி

மனைப்பிரிவு வரைபடம்

மாவட்டம்	:	காஞ்சிபுரம்
வட்டம்	:	குன்றத்தூர்
கிராமம்	:	படப்பை
நில அளவை எண்	:	393/1A2 ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்
அளவு		1 : 400
இணையதள விண்ணப்ப எண்	:	CHBAYIIG
மனைப்பிரிவு இடத்தின் பரப்பு	:	4050 ச.மீ
கோரிய மனைகள்	:	27
ஒதுக்கிய மனைகள்	:	26
மனைப்பிரிவின் எல்லை		
நிலையிலுள்ள சாலை		

பொது ஒதுக்கீடுகள்: (தானப்பத்திரம் எண்:2741/2024,நாள்:27.03.2024 மூலம் உள்ளாட்சிக்கு தானமளிக்கப்பட்டுள்ளது.)

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பகுதி:

பொது உபயோகம்	:	20.73 ச.மீ (0.68%)	
தமிழ்நாடு மின் உற்பத்தி (மு) பகிர்மான கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பகுதி	:	18.54 ச.மீ (0.61%)	
உத்தேச சாலைகள்		1029.0 ச.மீ	

	மூலைமுடக்கு	கட்டிட வரம்பு
7.20மீ - 12.0மீ அகல சாலை	1.50மீ x 1.5மீ	1.5மீ
18.0மீ அகல சாலை	4.5மீ x 4.5மீ	3.0மீ

நிபந்தனைகள்:-

1. இம்மனைப்பிரிவுக்கு சம்மந்தப்பட்ட உள்ளாட்சி இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இட எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய்த்துறை அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2. அரசாணை எண்.18 நாள்:04.02.2019 மற்றும் அரசாணை எண்.16 31.01.2020 நகராட்சி நிர்வாகம் (மு) குடிநீர் வழங்கல் துறை - குடிநீர் சாலை ஒதுக்கீடுகளை (மு) பொது உபயோக பகுதியினை உள்ளாட்சியே தானமாக பெற்றுக்கொண்டு பராமரிக்க வேண்டும் என்றும், நில உரிமம் குறித்து உள்ளாட்சியே முழுப்பொறுப்பு என்றும் தெரிவிக்கப்படுகிறது.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் அரசாணை எண்:181 வீ.வ (மு) ந.வ.-ன் நாள்: 09.12.2020 Para 4(V) -ல் தெரிவித்த கீழ்கண்ட நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

உள்ளாட்சி அமைப்பு, மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல்/ உரிமம் வழங்குவதற்கு முன் மனுதாரர் சாலை அமைப்பு வரைபடத்தின்படி தார்சாலைகள் அமைத்துள்ளதை உறுதிசெய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.மேலும் DHT அமைத்து நீர் வழங்குதல் வசதிகள், கழிவறை வசதால் (மு) தெருவிளக்குகள் போன்ற வசதிகள் உள்ளாட்சி அமைப்புகளால் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி அமைக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதி செய்து இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட விபரத்தினை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (மு) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குதர் அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாருக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் வழங்கப்பட வேண்டும்.
6. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்காக சம்மந்தப்பட்ட இடத்தில் 60"x40" என்ற அளவுக்கு குறையாமல் காங்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.
7. சாலை அமைப்பு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்வாரியத்திற்காக (TANGEDCO) ஒதுக்கப்பட்டுள்ள இடத்தினை மின்வாரிய (TANGEDCO) பயன்பாட்டிற்காக இடத்தின் அளவுகள், பரப்பளவு ஆகிய விவரங்களுடன் குறிப்பிட்டு தானமாக தானப்பத்திரம் மூலம் மின்வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.
8. உத்தேசத்தில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் முழுக்க சாலைகளாக நிலை நிறுத்தப்பட வேண்டும்.

சிறப்பு நிபந்தனைகள்:-

நகர் ஊரமைப்புத்துறை சட்ட பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை தொழில் நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

APPROVAL NO:SWP/DTCP/KANCHIPURAM-LAYOUT No: 48/2024

உதவி இயக்குநர் / துணை இயக்குநர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
காஞ்சிபுரம் மாவட்டம்.